# விளம்பரம் VLAMBARAM™

☎: 416-282-8059 மாதமிருமுறை வெளிவரும் சமூக முன்னேற்றப் பத்திரிகை இலவசம் FREE

நதி VIII JUNE 15, 1998 பாலம் 12



## வீடு விற்பது, வாங்குவது

வாழ்வில் முக்கியமான செயல்களில் ஒன்று. எனவே இவை பற்றி பூரணமான இலவச ஆலோசனைகளைப் பெற அழையுங்கள்:

☎: 416-287-2183/491-4002

ராஜா எம். மகேந்திரன் sales rep.

RE/MAX Crossroads Rlty Inc.

நம்பிக்கை ▲ நேர்மை ▲ திறமை




- சொந்தத்தில் திருமணம் செய்வது நல்லதா? (பக்கம் 2)
- மாற்றான் வீட்டுத் தோட்டத்து முல்லை மணக்குமா? (பக்கம் 8)
- உபவாசம் இருப்பதால் நோயை சுகமாக்கலாமா? (பக்கம் 5)
- நோயை அறிய சிறுநீரை பரிசோதியுங்கள்? (பக்கம் 4)
- இலவச உணவு : 1. கிராமத்து விருந்து (யோகாஸ்), 2.Golden Griddle
- செய்யும் தொழிலிற்கேற்ப ஆயுட் காப்புறுதி கூடுமா? (பக்கம் 13)
- கலக்சியின் ஆரம்ப வடிவமும் விநாயகரின் சின்னமும் (பக்கம் 10)



## துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ் ☎ (416) 267-8221



## SNR OPTICAL

அனைத்து டிசைனர் பிறேம்ஸ் மற்றும் கண்ணாடிகள் (Designer Frames & Sunglasses) மேலும் சகல திருத்த வேலைகள் சிறந்தமுறையில் அனுபவமிக்கவரால் செய்துகொள்ள தொடர்புகொள்ளவும்.

- அரசாங்க உதவியில் உள்ளவர்கள், மற்றும் அனைத்து காப்புறுதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.
- 60 வயதிற்கு மேற்பட்டவர்களிற்கு சில வசதிகளுமுண்டு.

ரதி FRAME CONSULTANT (Robert Optician)

☎: (416 )332 9995

## EZ DRIVING SCHOOL

நவீன தன்னியக்க வாகனங்களில் சொந்த மொழியில் பயிற்சி விளக்கங்களுடன் அரச அனுமதி பெற்ற பயிற்சியாளரிடம் பயிற்சி பெற

PL. CALL: JEYAKUMAR



(416) 283-4100

Cell: 822-6741

(9 வருட கால அனுபவ பயிற்சியாளர்)

## SINGAPORE PAGING




Motorola Brovo $39.00
NEC RELAY $39.00
MotorolaPronto $65.00
MOTOROLA EXTRA FLEX $99.00

மாதம் $5.95 மட்டுமே

- 12 மாதங்களுக்கு முன் பணம் செலுத்த வேண்டும்
- Pagerஐ கொள்முதல் செய்ய வேண்டும்
- 3மாத குத்தகையும் உண்டு (ஆரம்பத்தில்)
- ஸ்காபரோவில் கிளைகளும் உண்டு

விபரங்களுக்கு : Raj ☎: (416) 745-2378



## ஞானம்ஸ் ஸ்ரூடியோ

Introducing 1Hour Photo Lab: 3X5 & 8X12

Professional Photographer

தொடர்பு - கதிர்

☎: (416) 750-8118

2425 EGLINTON AV. E. UNIT 3
KENNEDY/ EGLINTON
SCARBOROUGH

## துரித பணமாற்று சேவை

கனடாவின் முக்கிய நகரங்களில் இருந்து நம்பிக்கை நாணயம் உத்தரவாதத்துடன் துரித பணமாற்று சேவை

மன்னார், பூனகரி, வன்னி, புத்தளம்

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, வவுனியா, கொழும்பு, இந்தியா, ஐரோப்பிய நாடுகள்

AGR

2805 Eglinton Ave. East, Scarboro. Ont., M1J 2E1

☎: 261-0024 Fax: 261-9462

## RAAJ WATCH WORK

சகல விதமான மணிக்கூடுகளும் (Watch & Clock) குறைந்த கட்டணத்தில், உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் திருத்திக் கொள்வதற்கு நகரில் நாட வேண்டிய ஸ்தாவனம். NATHAN

☎: (416) 265-5580

2885 LAWRENCE AVE. EAST
BRIMLY/ LAWRENCE (Close to Biway)

## ELECTRICAL REPAIRS

உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள் றேடியோக்கள் வீடியோக்களை குறைந்த செலவிலும், சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ளநாடுங்கள்

முருகதாஸ்-☎ 261-6883

## சகல ரக வீடியோக்களும் திருத்துமிடம்

TV, VIDEO, MICROWAVE OVEN, REMOTE CONTROL, AMPLIFIER

நியாயமான விலையில், தரமாகத் திருத்திக் கொடுக்கப்படும். (24 வருட அனுபவம்)

கிருபானந்தராஜா (LONDON QUALIFIED)

TEL: 438-9134

## AIRPORT SERVICE & MOVING VAN

ஏயர்போட்டிற்கு பிரயாணிகள் போய்வருவதற்கான சேவைகளும், மற்றும் பொருட்களை இடமாற்றம் செய்வதற்கான சேவைகளிற்கு

☎: (416) 759-0557

## ENGLISH TUITION

அனுபவம் வாய்ந்த E.S.L பட்டதாரி ஆசிரியையினால் ஆங்கிலம் 1 - 13 வகுப்பு மாணவர்களுக்கு தனிப்பட்டமுறையில் கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: திருமதி. சிவா

☎: (416) 292-1827

## MOVING DELIVERY

*FOR SMALL OR BIG MOVING
* REASONABLE RATES * RELIABLE SERVICES

☎: (416) 286-7562

CELLULAR PHONE: 562-7977

## TUITION

FINCH / WESTON பகுதியில் அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் ஆறாம் வகுப்பு தொடக்கம் OAC வரை MATH, PHYSICS பாடங்கள் சிறந்த முறையில் கற்பிக்கப்படும்

BALA:- PAGER :339-3491

## TUITION

அனுபவம் வாய்ந்த தரமான முதுகலை (M.A.) பட்டதாரி ஆசிரியையினால் KINDERGARDEN இலிருந்து Grade 6 வரையிலான பிள்ளைகளுக்கு Tution சொல்லிக் கொடுக்கப்படும்

PL. CALL: 755-8034


## DR. B. B. Kalra

Family Physician - (குடும்ப வைத்தியர்)

3268 Finch Ave. E., Scarborough, Ont. (One Traffic light West of Warden)

Tel: (416) 492-9880

எங்களின் சேவைகள்




- வருடாந்த மருத்துவ பரிசோதனை
- குழந்தைப் பராமரிப்புக்கள்
- கர்ப்பப் பரிசோதனைகள்
- குடும்பக்கட்டுப்பாட்டு ஆலோசனைகள்
- பாலியல் நோய்க்குரிய சிகிச்சைகள்
- நோய்த் தடுப்பு ஊசிகள், E.C.G சோதனைகள்
- Allergy தடுப்பூசிகள் அவசியமேற்படின் வீட்டில் வந்தும் நோயாளிகளைப் பார்வையிடுவர்.

OHIP உள்ளவர்களுக்கு இச்சேவை இலவசம்

## சிவாகம கிரியா பீடம்



☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்.


சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்)
திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr. , Scarborough, Ont.



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD. - SCARBOROUGH, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978

# அறிவும் ஆக்கமும் (12) - விஜே குலத்துங்கம்



ஆரம்ப காலத்தில் நம்மவர் சொந்தத்திற்குள்ளேயே திருமணம் செய்து வந்தார்கள் தற்போது அது மாறி வேறு இடங்களிலும் திருமணம் நடக்கின்றது. சொந்தத்தை விட, பிற இடங்களில் திருமணம் செய்வது பல நன்மைகளை அளிக்கின்றது. இவற்றைப் பற்றி அறிவதற்கு பிறப்புரிமையியல் - Geneticsன் சில அடிப்படை விடயங்களை தெரிந்து கொள்வது அவசியம்.
மனித உடற் கலங்களில் 22 சோடி சாதாரண நிறமூர்த்தங்களும், ஆணா, பெண்ணா என்று தீர்மானிக்கும் இலிங்க நிறமூர்த்தங்கள் 1 சோடியுமாக மொத்தம் 46 நிறமூர்த்தங்கள் (Chromosomes) காணப்படும். ஒவ்வொரு நிறமூர்த்தத்திலும் குறித்த இடங்களில் Genes - பரம்பரையலகு காணப்படும். இந்த Genes தான் மனிதனின் பல்வேறு குணாதிசயங்களையும், இயல்புகளையும் தீர்மானிக்கின்றன. உதாரணமாக தலைமயிர் நிறம், உயரம், தோல் நிறம் போன்றவை ஒவ்வொன்றையும் தீர்மானிக்க ஒரு அல்லது பல Genes என்ற அடிப்படையில் பல்லாயிரக்கணக்கான Genes நிறமூர்த்தங்களில் காணப்படும்.

சாதாரண உடற்கலங்கள் எல்லாவற்றிலும் இந்த Genes களைக் கொண்ட நிறமூர்த்தங்கள் சோடிகளாக 23 சோடிகள் காணப்படும். ஆனால் இனப்பெருக்கக் கலங்களான ஆணின் விந்துக் கலங்களிலும் பெண்ணின் முட்டைக் கலத்திலும் சோடிகளின் ஒரு பகுதிதான் செல்கின்றது. எனவே சாதாரண கலத்தில் 46 நிறமூர்த்தங்களும், இனப்பெருக்கக் கலங்களில் 23 நிறமூர்த்தங்களும் இருக்கும். ஆண் கலமும், முட்டைக் கலமும் சேரும்போது, தகப்பனின் 23 நிறமூர்த்தங்களும், தாயின் 23 நிறமூர்த்தங்களும் சேர்ந்து பழையபடி சோடி சேர்ந்து 23 சோடிகளாக அதாவது 46 நிறமூர்த்தங்களாக மாறுகின்றது.

ஒரு இயல்பை தீர்மானிக்கும் Genes சோடியின் இரு பகுதியிலும் இருக்கும். இதில் ஒன்று மற்றையதை விட ஆட்சி கூடியதாக (Dominent) இருக்கும். ஆட்சியுடைய இயல்பே வெளித்தோன்றும். ஆட்சியுடைய இயல்பு ஆணிலிருந்தும் வரலாம், பெண்ணில் இருந்தும் வரலாம். சாதாரணமாக நோயை உண்டாக்கும் இயல்பை விட, நோயற்ற இயல்பு ஆட்சி கூடியது. நெருங்கிய சொந்தக்காரரின் Geneகள் ஒத்ததாக இருக்கும் எனவே நோய்கள் உள்ள Genes அல்லது வேறு தரம் குறைந்த Geneகள் இருக்குமாயின் இந்த இயல்புகள் நீங்குவதற்கு வழியில்லை. ஆனால் வேறு இடங்களில் திருமணம் செய்யும் போது இருபக்கத்திலும் இருந்து ஆட்சியுடைய இயல்புகள் பிறக்கும் பிள்ளைகளில் தோன்றும் வாய்ப்புகள் உண்டு. ஆட்சியுடைய இயல்பே வெளித்தோன்றும். ஆனால் சோடியின் மற்ற இயல்பு வெளியே தெரியாமல் இருக்கலாம். அந்த Gene ஒருவரின் தாய் அல்லது தகப்பனிடமிருந்து பெற்றதாக இருக்கலாம். இந்த Gene பிள்ளைகளிக்குச் செல்லும் போது, அது வெளிக்காட்டக் கூடிய இயல்பாக இருக்கும் சந்தர்ப்பம் உண்டு. இப்படியான நிகழ்வின் போது குழந்தை, தகப்பன், தாயின் இயல்புகள் இல்லாது தகப்பனின் அல்லது தாயின் பெற்றோர்களின் அல்லது பாட்டன், பாட்டிகளின் இயல்புகளைக் காட்டலாம்.

மாறுபட்ட இரண்டு Genes சேரும்போது, சிலவேளைகளில் இரண்டையும் விட சிறந்த இயல்பு பெறப்படலாம். இது Hybrid Vigour- கலப்பு வீரியம் எனப்படும். இந்த கலப்புப் பிறப்பின் நன்மைகளைப் பெறுவதற்காகவே, கால்நடைகளை செயற்கை முறை சினைப்படுத்தல் மூலம் (Artifical Insemenation) நல்ல கன்றுகளை பெறச் செய்கின்றார்கள். தாவரங்கள், பயிர்கள் போன்றவற்றிலும் இதன்மூலம் நல்ல இனப் பயிர்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இலங்கையில் காணப்படும் IR.8 என்ற நெற்பயிர் MI 1 என்ற மிளகாய்ப் பயிர் போன்றவை கலப்புப் பிறப்பால் உருவாக்கப்பட்டன.

நமது கலாச்சாரத்தில் மாமன், மாமிகளது பிள்ளைகளை திருமணம் செய்யலாம் ஆனால் சித்தப்பா, சின்னம்மாவின் பிள்ளைகளை திருமணம் செய்யக் கூடாது என்ற வழக்கம் உண்டு. பிறப்புரிமையியல் அடிப்படையிலோ அல்லது வேறு விதத்திலோ இவர்களுக்கிடையில் வித்தியாசம் இல்லை. மற்ற நாட்டவர் மாமன் பிள்ளைகளையும், சித்தப்பா பிள்ளைகளையும் சகோதரர்களாகவே கருதுகின்றார்கள். எது எப்படி இருப்பினும் சொந்தத்தில் திருமணம் செய்வது கூடாது.

Genes சேரும் போது சிலவேளைகளில் அவற்றுள் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இடமாற்றம். Gene முறிவு, அமைப்பு மாற்றம் போன்றவை ஏற்படலாம். இதனால் தாய், தகப்பன் அல்லது பரம்பரையில் இல்லாத குணாதிசயங்களும் தோன்றலாம். இது Mutation அல்லது விகாரம் எனப்படும். Gene களின் கட்டமைப்புகளில் ஒன்றான DNAன் ஏற்படும் மாற்றங்களால் இது ஏற்படுகின்றது. கதிரியக்கம், X-ray இரசாயன பதார்த்தங்களாலும் Geneகளில் விகாரம் ஏற்படலாம். அமெரிக்கா, ஜப்பானில் போட்ட அணுகுண்டின் கதிரியக்கத்தால் பல ஜப்பானியர்கள் இப்படியாக பாதிக்கப்பட்டார்கள். இவர்கள் மற்றவர்களுடன் சேர்ந்து விகாரமுடைய பிள்ளைகள் உருவாகாமல் இருப்பதற்காக இவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். வைத்திய பரிசோதனைகளின் போது X-ray எடுக்கப்படும் போது, ஒரு கனத்த தடித்த கவசம் ஒன்றால் உடல் மூடப்படுவதன் காரணம், X-ray ஆல் இனப்பெருக்கக் கலங்கள் பாதிப்படையாமல் தடுப்பதற்காகத்தான்.

மனிதரின் 22 சோடி நிறமூர்த்தங்கள் இயல்பு, குணாதிசயங்களையும் மற்றைய சோடி, பிறக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்பதையும் தீர்மானிக்கும். பெண்களின் சோடியின் இரு நிறமூர்த்தங்களும் X, Xஆக இருக்கும். ஆண்களில் ஒன்று X ஆகவும், மற்றது Y ஆகவும் இருக்கும். பெண் முட்டைக்கலத்தை உருவாக்கம்போது அதில் X தான் காணப்படும். ஆணின் இனப்பெருக்கக் கலங்களில் பாதி X ஆகவும், பாதி Y ஆகவும் இருக்கும். ஆணின் X கலம் முட்டையுடன் சேர்ந்தால் ஆண்குழந்தையும், Y கலம் முட்டையுடன் சேரும்போது பெண் குழந்தையும் பிறக்கும்.

சாதாரணமாக பெண்களில் மாதம் ஒரு முறை ஒரு முட்டைக் கலம் தோன்றும். சில பெண்களில் சில வேளைகளில் ஒன்றுக்கு மேற்பட்ட முட்டைகளும் தோன்றலாம். இவை கருக்கட்டப்பட்டு வளரும் போது இரட்டைக் குழந்தை அல்லது இரண்டிற்கும் மேற்பட்ட குழந்தைகள் பிறக்கலாம். பல முட்டைகளிலிருந்து குழந்தைகள் தோன்றினால் இவை ஒன்றையொன்று ஒத்ததாக இருக்கமாட்டாது. சில சந்தர்ப்பங்களில் கருக்கட்டிய முட்டை, இரண்டாகப் பிரிந்து, தனித் தனியாக வளரும் போதும் இரட்டைக் குழந்தைகள் தோன்றுகின்றன. ஒரு முட்டையில் இருந்து பிரிந்ததால் Gene அமைப்பு ஒன்றாக இருக்கும். எனவே இரண்டும் ஆணாக அல்லது இரண்டும் பெண்ணாக ஒரே தோற்றமுடைய Identical Twins தோன்றுகின்றன. கருக்கட்டிய முட்டை இப்படியாக பிரியும் போது முற்றாக பிரிகையடையாத போது ஒட்டிப் பிறக்கும் பிள்ளைகள் பிறக்கின்றன.

இரட்டைக் குழந்தைகளில் Genes ன் முக்கியத்துவத்தால், அண்மையில் வந்த திரைப்படத்திற்கு 'ஜீன்ஸ்' எனப் பெயர் வைத்தார் இயக்குனர். ஆனால் ஆங்கிலத்தில் எழுத்துக்கள் மாற்றப்பட்டு 'Jeans' என்ற நீள்காற்சட்டையின் பெயர் ஏனோ உபயோகிக்கப்பட்டது. பிறப்புரிமையியல் உடன் சம்பந்தப்பட்ட Genetic Engineering , குற்றவியலில் DNA, மற்றும் Cloning போன்றவை பற்றி அடுத்த இதழில் பார்ப்போம்.


புதிய நிர்வாகத்தின் கீழ்

**Markham / Sheppard** பகுதியில்

**NEW SPICELAND**

☎ : 292-0086


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 85

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | ■ | | | 3 |
| | ■ | 4 | | 5 | ■ | ■ | |
| | ■ | ■ | 6 | | | 7 | |
| | ■ | ■ | | ■ | ■ | | ■ |
| | | 8 | ■ | 9 | | | 10 |
| ■ | ■ | 11 | | | ■ | | ■ |
| | ■ | | ■ | | ■ | 12 | |
| 13 | | 14 | | | ■ | ■ | 15 |

### இடமிருந்து - வலம்

1. அண்மையில் ஐதரசன் குண்டுகளைவெடிக்க வைத்து அணுசக்தி வாய்ந்த நாடுகளுடன் தன்னையும் இணைத்துக் கொண்ட நாடு.
3. ஆண்யானை (வல-இட)
4. மோர் கடைய உதவும்
6. 27 நட்ச்சத்திரங்களில் ஒன்று
8. உறுதி (வல - இட)
10. கௌரவம் (வல - இட)
11. உலா வருதல்
12. பறவை
13. நவரத்தினங்களில் ஒன்று

### மேலிருந்து கீழ்

1. இலக்கணத்தில் தமிழ் எழுத்துக்கள் ய,ர,ல,வ,ழ,ள இல்லாது கூறப்படும்
2. பிரயாணம்
3. நாற்காலி
4. அறிவு (கீழ்-மேல்)
5. கறள்
7. இனிப்பு
9. தூய்மை
13. நூறுலட்சம்
14. கணவனும் மனைவியும் (கீழ்-மேல்)
15. ஊர்வனவற்றில் ஒன்று

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "ஸ்பைஸ் லாண்ட்" இல் பாவிக்கக்கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் June 26, 98க்கு முன்னர் கிடைக்க வேண்டும்.
Address: **P.O.Box 37527, 31 Tapscott Rd., Scarborough, Ont. M1B 5P9**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ந | க | னா | ■ | ப | ■ | ■ | மே |
| ல் | ■ | க | ள | ஞ் | சி | ய | ம் |
| லெ | ■ | ■ | ■ | சு | ■ | ■ | ப |
| ண் | ண | பா | ■ | ■ | செ | ■ | டு |
| ணெ | ■ | ■ | மா | ர் | க் | க | ம் |
| ய் | பா | ■ | ய | ■ | கு | ம் | ■ |
| ■ | ■ | மை | வ | உ | ■ | ம | ■ |
| மா | நீ | ச | ன் | ■ | சி | ல் | லு |


### #84இல் வெற்றி பெற்றோர்

1) சிவரூபன் கார்த்திகேசு, Mississauga
2) T. கார்த்திகா., Scarborough


நியூ ஸ்பைஸ்லாண்ட்
5800 Sheppard Ave. E.
Unit#16 Scarborough, Ont.




கிரகப் பொருத்தம் பார்த்தல்
3
4
சாதகக் குறிப்பு கணித்தல்
ல
6
12
எண்சோதிடப்படி ஆலோசனை கூறுதல்
சுபமுகூர்த்தம் கணித்தல்
பலன் பார்த்தல்
10
9
யோ கா சோ தி ட ம்




(416) 299-8361

# APPLEMORE AUTOMOTIVE

**DETAILING**
Motor shampoo
Interior shampoo
Exterior wash & waxing






Repairs
safety certification
overall maintenance
under coating &
Rust proofing

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு அழையுங்கள்

☎ [416] **285-4998**

முகவரி: **2500 LAWRENCE AVE. EAST, UNIT #11**
**SCARBOROUGH, ONT.** (MIDLAND & LAWRENCE)

---

*We are entering 7 th year service in Scarborough.*



## Better Work ... Less Money

**N.T.E Auto Inc.**
New Trade Engineering

We service
EUROPEAN, JAPANESE & DOMESTIC cars.
we are not just a Dealership.

**" FULLY LICENSED CLASS 'A' MECHANICS ON DUTY "**


We will reduce the worry and expense of maintaining your car by offering:

- Mechanical, Auto Electrical Repairs
- *Air Conditioning Service & Repairs*
- Mechanical Safety Inspection & Certification
- Minor & Major Repairs on European, Japanese & Domestic Cars
- Specializing in BMW
- Parts - repairs rather than replace when possible
- Free Estimates

**என். ரி. ஈ. ஓட்டோ இங்.**

**AUTO INC.**
New Trade Engineering

151 NANTUCKET BLVD, UNIT: 12
SCARBOROUGH, ONT.
☎(416) 750 - 1573
SIVABALAN




---

**Pillayar Traders**

**SRILANKAN . EAST & WEST INDIAN**
GROCERIES & TEXTTILES
**3630 LAWRENCE AV. E., SCARBORO**
☎ : **438-7746**

**விஷேச போட்டி இல. 75**

1. கனடாவில் இலங்கைத் தமிழரால் வெளியிடப்பட்ட CD இசைத் தட்டுகளின் பெயர்களில் 5ஐ தருக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ட | ம் | த | சி | ஞ் | ர | னோ | ம |
| ல் | அ | ஆ | அ | கா | த | வ | னி |
| ற | ரு | ன் | லை | ன | ம் | ய | ச |
| ன் | ம் | மீ | க | ப | ட | லி | ஞ் |
| தெ | பு | க | ள் | டி | ட் | ன் | ர |
| த் | க | னா | ன் | கி | ரா | சை | ன |
| லா | ள் | கா | சி | ல் | போ | ன | கா |
| நி | ரி | ச | ங் | க | வி | க | ரா |

மேற்காட்டப்பட்ட சதுரப்பெட்டிகளில் பல சொற்கள் தலைகீழாக, சீராக, இடம் வலமாக, குறுக்குப்பாடாக (diagonal). நாலு மூலை வழியாகவும் அமைந்துள்ளது. இவற்றை இனம்கண்டு பினவருவனவற்றிற்குரிய விடைகளை July 13, 98 ற்கு முன்னர் விளம்பர விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

**# 74ன் விடைகள்**

1. ஸ்பெயின், ஜேர்மனி, பிறேசில், சுவீடன், ரூமேனியா, நெதர்லாந்து, பல்ரேியா
2. அமெரிக்கா, இத்தாலி, மெக்சிக்கோ, ஸ்பெயின்


பரிசு பெற்றோர்:

1) M. Varathan, Mississauga
2) A. பார்வதி, **Donmills**

**பரிசுகள்:** பிள்ளையார் ரேடர்ஸ் இல் பாவிக்கக்கூடிய இரண்டு($15, $10) பெறுமதியான vouchers (இவற்றிற்கு cash value கிடையாது)

**விதிகள்:**ஒருவர் எத்தனை முறையும் முயற்சிக்கலாம்.பிள்ளையார் ரேடர்ஸ்,விளம்பரம் ஊழியர்கள் பங்குபற்ற முடியாது. விளம்பரம் குழுவின் முடிவே இறுதியானது.

---



## குடும்ப பல்வைத்தியர்
## Family Dentist

**Dr. Mahin Pouyan**

உங்கள் முழுக் குடும்பத்திற்கும் பல் சம்பந்தமான சிகிச்சைகளிற்கு 18 வருட காலம் அனுபவமும், City of NorthYork Public Schools Board of Education ஆல் தெரிவு செய்யப்பட்ட பல் வைத்தியர் Dr. Mahin Pouyan ஐ நாடுங்கள்

☎ (416) **225-5522**

* ஞாயிற்றுக் கிழமைகளிலும் சிகிச்சை வழங்கப்படும்.

263 Finch Ave. E. (Finch & Bayview), North York, Ont. M2N 4S1

---

**KING STYLES** **TAILORING & TEXTILE**
CUSTOM MADE MEN AND KIDS CLOTHING

20 வருட அனுபவம் பெற்றவர் (10 வருடங்கள் - கனடா) Mississauga, Brampton
தமிழ் மக்களின் ஆடைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உங்கள் அருகாமையில்
KING STYLES TAILORS

ஆண்களிற்கான: Suits, Pants, shirts, Blazer, Prince Suit, சர்வாணி, குர்த்தா, நாஷனல்

பெண்களிற்கான சகலவிதமான ஆடைகளும் சிறந்த முறையில் தைத்துப் பெற்றுக் கொள்ளலாம். தொடர்புகளுக்கு: **"MINIMOD" RANJAN**

**Tel: (905) 281-9725**

1185 Dundas St. E. 2nd Floor, Unit 218, Mississauga, Ont. 14Y 2L6

---

# நியூ ராஜன் சலூன்

உங்களது அழகு கூந்தலை மேலும் அழகுபடுத்த நகரில் புதியதோர் நிறுவனம்

* பெரியவர்களுக்கு $9.00
* சிறுவர்களுக்கு $7.00
* வயது வந்தவர்களுக்கு விஷேட கழிவு



**Tuesday to Sunday 10:30Am - 7:30Pm**
**Pl. Call: Raja Tel: (416) 741-9198**
**Pager (416) 739-2393**

5010 Steeles Ave. W., Unit 19, (Kipling / Steeles)

# ஆரோக்கிய வாழ்வு (12) - N. செல்வசோதி



## சிறுநீரும் - நோய் அறியும் முறைகளும்

"விளம்பரம்" பத்திரிகை வாயிலாக "ஆரோக்கிய வாழ்வு" வாசக நேயர்களுக்கு இம்முறை சிறுநீரின் மூலம் நோய்களை இனம் காணமுடியும் என்பது பற்றிய சிறு விளக்கத்தை எழுதுகின்றேன். பொதுவாகப் பார்க்கப்போனால் நமது மருத்துவத்துறையில் உடல் பரிசோதனை முறைகள் பல இருக்கின்றன. இவற்றுள் சிறுநீர் பரிசோதனைக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் காரணம் இலகுவான முறையில் பல விஷயங்களை அறியமுடிகிறது. சிறுநீரின் நிறம், ஒளி, படித்திருக்கும் பொருள் இவற்றைக் கொண்டு நோயை அறிகின்றனர்.

ஒரு குறிப்பிட்ட அளவுதான் இரத்தத்தில் சர்க்கரை இருக்க வேண்டும். அளவுக்கு அதிகமான இருக்குமானால் அது சிறுநீரின் மூலம் வெளியேற்றப்படும். அவ்வாறு சிறுநீரில் சர்க்கரை இருந்தால் நீரிழிவு இருப்பதை கண்டறிய முடியும். இதே சமயம் ஒன்றை நினைவில் கொள்ளவேண்டும் இனிப்பு நிறைந்த உணவுகளை அதிகம் உட்கொண்டால் சிறுநீரில் சர்க்கரை கலந்திருக்கும். சிறுநீரில் பித்த நீர் இருப்பின் கல்லீரலிலோ, பித்தநீர் பையிலோ ஏதாவது நோய் இருக்க வாய்ப்பு உண்டு. பித்தநீர் இரத்தத்தில் கலந்து பின்னர் சிறுநீரிலும் படியும். மேலும் சில நரம்பு நோய்கள் நிமோனியா, சுரம் போன்ற நோய்கள் உடலில் ஏற்படும்போது சிறுநீரில் காரத்தன்மை இருக்கும். பொதுவாக சிறுநீரில் அமிலத்தன்மை உண்டு. அமிலத்தன்மை பரிசோதனை மூலமாக ஒருவருடைய உணவுமுறையான பழக்கத்தைத் தெரிந்துகொள்ளலாம். மரக்கறி உணவை உட்கொண்டால் அதில் அமிலத் தன்மை இருக்கும். அதேபோல சிறுநீரில் புரதம் மிகுதியாக இருந்தால் சிறுநீரகத்தில் அழற்சி, உடலில் நச்சுப் பொருளோ அல்லது பக்டீரியா நோய் தொற்றியிருக்கலாம். ஆனால் இதனை முழுமையான பரிசோதனையின் மூலம்தான் கண்டறியமுடியும். காரணம் ஒருவர் கடுமையாக உழைத்தாலும் அவருக்கு சிறுநீரில் புரதம் அதிகம் காணப்படலாம். மேலும் சிறுநீரில் கல்சியத்தின் அளவைக் கொண்டு எலும்பில் ஏதேனும் வியாதிகள் உண்டா என அறிந்து கொள்ளலாம். சிறுநீர் பரிசோதனை மூலம் நாளமில்லா சுரப்பிகளின் தொழிற்பாடுகளைக் கண்டறியமுடியும்.

பெண்கள் கருவுற்றிருக்கும் பொழுது சிறுநீரை இடையிடையே பரிசோதனை செய்ய வேண்டும். காரணம் அதுதான் தாயினதும், சிசுவினதும் ஆரோக்கிய நிலைபற்றிக் காட்டும். அத்துடன் தாயின் உடலில் உள்ள கழிவுப் பொருள்களோடு உள்ளே வளரும் சிசுவின் கழிவுப் பொருள்களையும் வெளியேற்றும் பணியை தாயின் சிறுநீரகங்கள் தான் செய்கின்றன. அதனால் அதனால் அடிக்கடி பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். ஏதாவது தொற்று நோய் ஏற்பட்டால் அதை தடுக்க பெரிதும் உதவும். போதைப் பொருட்கள் பாவிப்பவர்களின் சிறுநீரை பரிசோதனை செய்வதன் மூலம் மிக எளிதாகத் தெரிந்து கொள்ளமுடியும். தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களுக்கு உடலில் நச்சுத் தன்மை சேர்ந்து இருந்தால் அதனை சிறுநீர் பரிசோதனை மூலம் அறியலாம்.

சோதனைச் சாலைகளில் (LAB) பரிசோதனைக்கு எடுத்த சிறுநீர் உடனே அதற்குரிய சில பொருட்களைக் கலந்து வைக்கவில்லையெனின் அது பயன் கிடைக்காத நிலை உருவாகும். அதுபோல நாம் தினசரி பலவேளைகளில் சிறுநீர் கழிக்கின்றோம். ஆனால் அதன் தன்மை வேறுபாடாக இருக்கும். காலை தூங்கி எழுந்தவுடன் கழிக்கும் சிறுநீர் ஒரு தன்மையாக இருக்கும். காலை உணவுக்குப் பின்பு வரும் சிறுநீர் வேறு தன்மையாக இருக்கும். பின் நீர் ஆகாரம் அருந்தியதும் சிறுநீர் வேறு தன்மையாயிருக்கும். அதனால் பரிசோதனையாளரின் ஆலோசனைப் படியே சிறுநீரை பரிசோதனைக்கு கொடுக்க வேண்டும். காரணம் உணவை உட்கொண்ட பின்னர் சிறுநீரை பரிசோதனைக்குக் கொடுத்தால் சிறுநீரில் சர்க்கரை இருக்கும். அதே போல் தண்ணீரை அதிக அளவில் குடித்து விட்டு சிறுநீரை பரிசோதனைக்குக் கொடுத்தால் எதையும் கண்டறிய முடியாமல் போய்விடும். சிறுநீரை பரிசோதனை செய்யும் போது சீழ் போன்ற உயிரணுக்கள் தென்பட்டால் சிறுநீர்ப் பாதையில் அல்லது உடலில் நோய் தொற்றியுள்ளது என்பதைக் கண்டறிய முடியும்.

உடலில் எந்த இடத்தில் நோய் உள்ளது என்பதனை கண்டறியக் கூடிய ஒரேயொரு எளிதான முறைதான் சிறுநீர் பரிசோதனை. இந்த சிறுநீர் பரிசோதனை முறையை மற்ற சோதனைகளுடன் ஒப்பிட்டு உடலின் முழுமையான பரிசோதனைக்கு உதவுவது சிறுநீர் சோதனையே என்பதனை உணர முடியும். இத்தகைய சோதனையே வாழ்நாளில் பெரும்பான்மையினருக்கு பலமுறை உயிர்காக்கும் சிறந்ததோர் பரிசோதனை என்பதனை மருத்துவத் துறையில் எண்ணவும் மறுக்க முடியாத உண்மையே.

ஆகவே "விளம்பரம்" பத்திரிகை வாசகர்களே! சிறுநீர் பரிசோதனையை தயங்காது இடையிடையே செய்து பார்த்து உங்கள் உடல் நிலை பற்றி அறிந்தகொள்ளுங்கள். நன்றி - யோகக்கலை


Neelam SILK

வட அமெரிக்காவில் உயர்ந்தரகப் பட்டுப் புடவைத் தெரிவிற்கு ஓர் சிறந்த புடவை மாளிகை

நீலம் சில்க்

அனைத்து மக்களின் அன்பான நல்லாதரவுடன் 6வது ஆண்டில் வெற்றிப் பாதம்பதிக்கும்

நீலம் சில்க்கின் 1998ம் ஆண்டிற்கான புதிய வருகைகள்

- கிரிஜாவின் சௌந்தர்யா ரை அன் டை (Tie & Die) சாறி
- கிரிஜாவின் சிம்போனி கிறேப் சில்க் சாறிகள்
- கிரிஜாவின் பிரதீபா 2 கலர் தாவணி ரிசு சேலைகள்
- கிரிஜாவின் சுவாயம்வர் ரிசு (Custom Made Special Jari)
- மினி அபூர்வா சேலைகள்



கோலம், ரங்கோலி, அபூர்வா, காஞ்சியின் புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள் "நீலம் சில்க்"

"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"

1453 GERRARD STREET EAST
(Indian Bazzar)

யோகாசன வகுப்பக்கள்

அனுபவமிக்க ஆசிரியரால் பிரதி ஞாயிறு தோறும் காலை MARKHAM / ELLESMERE இற்கு அருகாமையில் அமைந்திருக்கும் வோபன் கொலிஜியேற்றில் (Woburn Collegiate) நடாத்தப்படுகின்றது.

மேலதிக தொடர்புகளுக்கு சத்தி : 291-5853

7 DAYS Open நகரின் மத்தியில்

GREAT ONE TEXT

1368 QUEEN ST. WEST (QUEEN & BROCK)
TEL: (416) 588-7989




- சிறுவர்களுக்கான உடைகள்
- ஆண்கள், பெண்களுக்கான உடைகள்
- USA, LONDON, SINGAPORE பிடவைகள்

* எக்ஸ்பிரஸ் பணமாற்று சேவை

- 3வது வருடத்தில் கால்பதிக்கும் GREAT ONE TEXT


EVERY WEEK ARRIVAL

YARLCAN
STEAM CLEANING



Tel: (416) 724-9085 / Pager : 600 0335 / Cell: 315 0332

# "லங்கணம் பரம ஔசதம்"



-ஜோதிட விஞ்ஞானி, வைத்திய கலாநிதி, பேராசிரியர் C.S.S. சோமசுந்தரம்

இவ்வுலகில் வாழும் அத்தனை ஜீவராசிகளுக்கும் உயிர் வாழ மிகமிக அவசியம் காற்று, தண்ணீர், உணவு அதன் பின்பு வருபவையே மற்றவையாவும். இதிலே நான் இன்று எழுதபோகும் செய்தி 'லங்கணம் பரம ஔசதம்' என்பதாகும். லங்கணம் என்றால் நோன்பு, உபவாசம், விரதம் இருப்பதாகும் பரம ஔசதம் என்றால் அற்புதமான மருந்து என்பதாகும். நம்மில் அநேகர் ஒரு நேரம் உணவு இல்லாவிடில் மிகவும் மனம் நொந்து, வெந்து, இப்படியாக உண்ணாமல் வேலை செய்ய வேண்டுமென்று ஒருவிதியா கடவுளே, உனக்கு, கண்ணில்லையா, மூக்கில்லையா என்று வைவோர் பலரைப் பார்த்தும் அவர்கள் அறியாமைக்கு வருந்தியும் நல்ல புத்திமதி கூறி உபவாசத்தின் மகிமையை எடுத்தியம்பி அவர்களை விரதம் இருக்க வைத்துள்ளேன்.

காட்டிலேயுள்ள விலங்குகள் போல் நாட்டில் உள்ள மனிதர்களிலும் நாய், நரி, புலி, சிங்கம், கரடி, யானை, ஓநாய், மான், குதிரை, மாடு, பாம்பு என பல தரப்பட்ட மிருகங்களின் குணாதியங்களை கண்டிருப்பீர்கள். புலியின் சீற்றம், சிங்கத்தின் சுயநலம், நரியின் தந்திரம், பாம்பின் நச்சுத்தன்மையும், யானையின் வலிமை, பசுவின் தியாகம் இப்படியாக மனிதரின் குணஇயல்புகள் அநேகம். அதற்காக நாம் குணம் கெட்டு, தரம் கெட்டு வாழ்பவர்களிடம் சென்று நீங்கள் ஏன் இப்படியாக மோசமாய் நடக்கிறீர்கள் என்று கேட்பீர்களா? அப்படி கேட்டால் விளைவு எப்படியிருக்கும் அதற்காக ஏன் வீண் வம்பு என்று சகலரையும் சகித்து வாழ்கிறீர்கள். வாழப் பழகிக் கொண்டிருக்கிறீர்கள். அந்த சகிப்புத்தன்மையால் தான் இன்று உலகம் நிலைத்துள்ளது அல்லது என்றோ, எப்போ மக்கள் யாவரும் அழிந்து பட்டிருப்பார்கள். சகிப்புத்தன்மை பொறுமை என்பதெல்லாம் மிக உயர்ந்த பண்புகள். அதே போல் ஓர் சகிப்பு தன்மையை சேர்ந்ததுதான் உபவாசமும். இது ஒரு அருமருந்து மூலிகை. கண்ணால் காணமுடியாத உணரக்கூடிய ஓர் சிறந்த ஓர் ஆரோக்கிய வாழ்க்கை வழிகாட்டி. நூறாண்டு வாழ்விற்கு ஒரு ராஜபாட்டை என்பதை எவரும் மறந்து விடக்கூடாது.

ஒரு பழமொழி உண்டு. யோகி ஒரு பொழுது, போகி இருபொழுது, ரோகி முப்பொழுது, துரோகி நாற்பொழுது உணவு உண்பான் என்று நம்முன்னோர்கள் கூறியுள்ளார்கள். மனிதன் அதாவது கடுமையாக உழைக்கும் தொழிலாளி ஒருவனுக்கு 2300 கலோரி உணவு வேண்டும். அப்படி கடுமையாக உழைக்காது சாதாரண வாழ்வில் உள்ளவர்களுக்கு 1200 கலோரி உணவு போதுமானது. யோகிகள் ஒரு பொழுதே உணவு உண்பார்கள். போகி அதாவது குடும்ப வாழ்வில் ஈடுபட்டுள்ளவர்கள் இரண்டு வேளை உணவு உட்கொள்ளுதல் வேண்டும். நோயிலிருந்து விடுபட்டு தேறி வருபவர்கள் சில குறிப்பிட்ட நோயாளிகள், மதுமேகம், குன்மம், குடல் சம்பந்தப்பட்ட, இரைப்பை சம்பந்தப்பட்ட நோயாளிகள் மூன்று தடவை ஒருநாளுக்கு உணவு உண்ண வேண்டும். இதையே ரோகி முப்பொழுது என்றனர். இவர்கள எல்லோரையும் விட ஒரு படி மேலானவர்கள் தான் நாலுபொழுது உண்ணும் துரோகிகள். இவர்கள் வீட்டிற்கும் நாட்டிற்கும் நட்டமே. உண்பதே தொழில் (Eat to Live, Don't Live To Eat) என்று சொல்வார்கள் ஆங்கிலத்தில். "உண்பதற்காக வாழாதே வாழ்வதற்கு மட்டுமே உண் " என்று சொல்வர். சிலர் நினைக்கிறார்கள் தாம் உணவு நிறைய, வேளை தவறாமல் உண்ணாவிட்டால் இறந்து விடுவோமா? என்று. இது ஒரு பெரிய தப்பபிப்பிராயம் ஆகும். உண்ணாமல் மனிதன் இறந்தான் என்று நாம் கேள்விப்பட்டதிலும், அளவுக்கு மிஞ்சி உண்டு இறந்தான், பல நோய்களால் இறந்தான் என்று தான் கேள்விப்பட்டுள்ளோம். வள்ளுவ மாமுனி சொன்னார் "அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு" என்று இந்த உடம்பு பெற்றவன் நீண்டகாலம் நோயின்றி வாழ வேண்டுமாயின் அளவாக புசித்தி, ருசித்து வாழ்வை ரசித்து வாழுங்கள் என்று தானே செப்பினார். (தொடரும்)

என்னிடம் கேட்கும் எத்தனையோ நோயாளிகளின் நோய்களை "உபவாசம்" இருக்கச் செய்தே மாற்றியுள்ளேன். பெரிய தொழிற்சாலைகளை வாரம் ஒரு தடவை மூடி, சரி பிழை பார்த்து இயந்திரங்களை சரி செய்து, எண்ணெய்விட்டு சுத்தம் செய்து நீண்ட வேலைக்கு தயார்படுத்துவர். அதே போன்றது தான் மனிதனின் உடலும். பிறந்த அன்று தாய் கொடுக்கும் பாலிலிருந்து, இறக்கும் போது ஊற்றுவார்களே வாயிலே பால் அதுவரையும் ஒருவன் வயிற்றிற்கும், குடலிற்கும், ஓய்வின்றி உண்டு கொண்டேயிருப்பானாகில் அதன் அர்த்தம் தான் என்ன. நிச்சயம் வயிற்றுக்கு கிழமையில் ஒரு நாள் ஓய்வு கொடுக்க கற்றுக்கொள்ளுங்கள். இதனால் அதாவது உபவாசம் வாரம் ஒரு தடவை இருப்பதால் நீங்கள் அடையும் சுகத்தை உங்கள் உடலில் உங்களை அறியாமல் உள்ள பல துர்நீர்கள்; வாயுக்கள், கொழுப்பு மற்றும் வாதம், பித்தம், போன்றவை அகன்று எப்படிபட்ட ஒரு சுகவாழ்வை வாழ்வீர்கள் என்பதை வர்ணிக்க தமிழில் வார்த்தை இல்லையே என்று ஏங்குகிறேன். உங்கள் வீடுகளிலே முதியோர் இன்றும் ஏதோ ஒரு பெயரைச் சொல்லி தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம், சித்திரைப் பௌர்ணமி, வைகாசி விசாகம், ஆனி உத்தரம், ஆவணி ஞாயிறு, புரட்டாதிச் சனி, ஐப்பசி வெள்ளி, கார்த்திகை சோமவாரம், மார்கழித் திருவெம்பா என்றும் கந்தசஷ்டி, விநாயகர் சதுர்த்தி, பிரதோசம், சிவராத்திரி, நவராத்திரி, காயத்திரி, ஐயப்பன், சனீஸ்வரன், செவ்வாய் என்று விரதம்அனுஷ்டித்து நம்முன்னோர்கள் வளமாக வாழ்ந்து நல்வழி காட்டிச்சென்றார்கள்.

விரதம் அனுஸ்டிக்கும் தினம் கோயிலுக்கு போயோ அல்லது வசதியில்லாதவர்கள், வீட்டிலே இருந்து கொண்டு தியானம் நற்சிந்தனைகளுடன் சமய சம்பந்தமான தேவார திருப்பதிகங்களை, கந்தசஷ்டி, விநாயகர், ஆதிபராசக்தி, கவிநாயகர்கள் கவசங்களை படித்தால் மிக நன்று. அன்றைய தினம் மனதில் சாத்தானுக்கு இடம் கொடுக்காதீர்கள். எல்லா உயிர்களையும் உங்களை விட ஒருபடி உயர்வாய் மதித்து வாழுங்கள். நிச்சயம் மனிதராகிய நீங்கள் தெய்வமாகி விடுவீர்கள்.

**முஸ்லிம் மதம், புத்த மதம், சைவமதம், வைஷ்ணவ மதம், சமண மதம், இப்படியாக ஒவ்வொரு மதத்தையும் நான் எழுதிய சமயப் புத்தகங்கள் ஐந்திற்காக ஆழ்ந்த ஆய்வு செய்தவன் நான். எதையும் ஓய்வின்றி செய்தாலும் தக்க ஆழ்ந்த ஆய்வின்றி செய்யமாட்டேன். அப்பொருளின் எப்பொருளின் மெய்ப்பொருள் காண வேண்டுமானால் நிச்சயம் ஆழ்ந்த ஆய்வு செய்வதே அதை பெறமுடியும். சக்தி மகாசக்தி, கிறிஸ்தவம் ஒரு தவம், பௌத்தம் ஒரு சகாப்தம், எல்லாம் இஸ்லாம். எம்மதமும் சம்மதம் என்பவை நான் எழுதிய நூறு இலக்கிய, வைத்திய, சட்ட, அரசியல், தத்துவ, ஜோதிட, ஆன்மீக, சமய நூல்களில் என்னால் எழுதப்பட்ட 5 சமய நூல்கள் இவையாகும். இந்த சமய நூல்களில் மாபெரும் உண்மை. மாபெரும் மகான்கள், ஞானிகள், முனிகள், மேதைகளே சமயத்தை உருவாக்கி நமக்கு நல்வழி காட்டியவர்கள். அத்தனை மத தலைவர்களும், புத்தர், முகமதுநபி, ஜேசு, ஆள்வார்கள், நாயன்மார்கள், குருநானக், ஆதிசங்கரர், ராமகிருஸ்ணர், ரமணரிஷி, மகாத்மா காந்தி, விவேகானந்தர் போன்றோர் எத்தனை விரதங்கள், சத்திய சோதனைகள், துன்பங்கள், துயரங்களை அனுபவித்துள்ளார்கள் என்று படித்துப் பாருங்கள் அவர்கள் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் பல உண்மைகள். விரதத்தின், நோன்பின், உபவாசத்தின் மகிமைகள் நிச்சயம் நீங்கள் அர்த்தமற்ற கடந்த வாழ்விற்கு வருந்தி உடனே பல புதிய வழிகளில் இறங்கி உய்வீர்கள். இது உறுதி.** (தொடரும்)

மேலதிக தொடர்புகளுக்கு: Vlambaram , P.O. Box 37527, 31 tapscott Rd. Svarborough, Ont. M1B 5P9

### உலக நாடுகள் சிலவற்றின் பாராளுமன்றங்களின் பெயர்கள்


| | |
|---|---|
| இலங்கை - பாராளுமன்றம் | அப்கானிஸ்தான் - சோறா |
| பிரித்தானியா - பாராளுமன்றம் | சீனா - தேசிய மக்கள் காங்கிரஸ் |
| டென்மார்க் - போகெற்றிங் | ஹங்கேரி - தேசிய சபை |
| இந்தியா - லோக்சபா | ஈரான் - மஜ்லிஸ் |
| அயர்லாந்து - டயல் | ஜப்பான் - டயற் |
| சுவீடன் - றக்ஸ்டாக் | ஐக்கிய அமெரிக்கா - காங்கிரஸ் |


**IMMIGRATION CONSULTANT**
Christina Staden, M.A.
Member of the Association of Immigration Counsel of Canada
18 years experience
**Free assessment, LOW COST, money back guarantee***
Tel. Toronto (416) 222-5254 Mississauga (905) 501-0307
9AM.-9P.M.

**TAMIL INSURANCE CLAIMS CONSULTANT**
"தமிழில் இலவச ஆலோசனை"
வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?
* தகுந்த ஆலோசனை
* சட்ட உரிமைகள்
* விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடு
* உரிய நஷ்டஈடு
* மற்றைய இழப்பீடு
* மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும், அறிவுரைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்தமுறையில் பெற்றுக்கொள்ள

**ரவி நடராஜா** (12 வருட காலம் அனுபவமுள்ளவர்)
தொடர்புகொள்ளுங்கள்: TEL: (416) 245-6555
FAX: (416) 245-7766
2095 Weston Rd., #201 (South of HWY 401), Toronto, Ont. M9N 1X7

நான் ஒரு வழக்கறிஞர் இல்லை.


குடிவரவு சட்டம் IMMIGRATION LAW
* அகதி நிலை விண்ணப்பம்
* மேன்முறையீடு
* ஸ்பொன்சர்
குற்றவியல் சட்டம் CRIMINAL LAW
விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ACCIDENT VICTIMS
ஆகியவற்றில் அனுபவமுள்ள வழக்கறிஞர்களுடன் மொழிபெயர்ப்பாளராகவும், உதவியாளராகவும் தொழில்புரிகின்றேன்.
உங்களுக்குத் தேவையான சட்டசம்பந்தமான உதவிகளுக்கு

தொடர்பு கொள்ளுங்கள்....> எஸ்.கே. தீசன் (416) 631-6322

# கனடாவில் முதன் முதலில் தலைவாழையில் விருந்து

# கிராமத்து விருந்து உணவகம்

L.L.B.O.





**நற்செய்தி!**

*MISSISSAUGA AND JANE & FINCH* பகுதியிலுள்ள வாடிக்கையாளர்களுக்கு "கிராமத்து விருந்து" உணவுப் பொதிகள் விநியோகிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. விபரங்கள் அறிய அழைக்கவும்

வெள்ளிக்கிழமையில்

## மரக்கறி விருந்து


6 மரக்கறி, கீரை, வடை, ஊறுகாய், மோர்மிளகாய், அப்பளம், ரசம், பாயசம், முத்துசம்பா அல்லது பசுமதி சோறு. இவை அனைத்தும் தலை வாழையிலையில் ஆக

**$5.99** மட்டும்

## யாழ்நண்டு விருந்து

யாழ்ப்பகுதியில் இருந்து இறக்குமதி செய்யப்படும் நீலக்கால் நண்டு கறியுடன் மீன் பொரியல் கருவாட்டுப் பொரியல் மாசி கட்டுச் சம்பல், அச்சாறு, கிழங்கு மசாலா, கத்தரி பிரட்டல், மைசூர் பருப்பு, கறி மிளகாய், வதக்கல், அவித்த முட்டை இவைகளுடன் முத்து சம்பா சோறு இவை அனைத்தும் தலை வாழையிலையில் ஆக

**$7.95** மட்டுமே



**கோடை காலத்தை முன்னிட்டு விடுமுறை நாட்களில் பிக்னிக், Beach கொண்டு செல்ல வசதியாக முன் கூட்டியே அழைத்து ஓடர் செய்யுங்கள். மொன்றியல் அல்லது USA கொண்டு செல்ல விசேட பொதிகள்**

**கிராமத்து விருந்து உணவகம் தங்களது இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி வழங்கும். விஷேட விலைக்கழிவுகளுடன் உணவுகள்.**

**ஜீன் 1ந் திகதி ஜீன் 31ந் திகதிவரை**

| | | | |
|---|---|---|---|
| 1. | காத்தான் குடி கொத்துரொட்டி (ஆடு, மாடு, கோழி) | - | $3.99 |
| 2. | இடியப்பம் சிவப்பு (Mon-Fri) (100 வேண்டினால் மட்டுமே) | - | $7.99 |
| 3. | சுடச்சுட வீச்சு ரொட்டி | - | 0.75 ¢ |
| 4. | முஸ்லீம் ஸ்ரைல் புரியாணி (ஆடு, மாடு, கோழி) | - | $5.95 |
| 5. | சிங்கப்பூர் நூடில்ஸ் - கோழி | - | $5.50 |
| | இறால் | - | $5.95 |
| | கணவாய் | - | $5.95 |

***Kiramathoo Virunthoo***

**☎: (416) 266-4240 / (416) 424-2164**

**603 Kennedy Road, Scarborough**

# விளையாட்டுத் தகவல்கள் (8)

*[இக் கட்டுரையை உங்களிற்கு தருபவர் உதைபந்தாட்ட நடுவர் சம்மேளனத்தின் (SSRA) செயலாளர் ஆக கடமையாற்றுபவரும், உதைபந்தாட்ட நடுவரும், ஒன்ராரியோவில் நடுவர்களின் (Instructor/Assessor) ஆக கடமையாற்றும் திரு. எஸ். கணேஷ் அவர்கள் ஆகும்.]*



## WORLD CUP-1998 (உதைபந்தாட்டம்)

### NEW LAW CHANGES 97/98

World Cup - 98 மிகவும் பரபரப்பாக தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சென்ற இதழில் பங்குபெறும் நாடுகளைப் பற்றிப் பார்த்தோம். இவ் இதழில் புதிதாக சேர்க்கப்பட்ட புதிய விதிகள் (97/98) யாவை எனப் பார்ப்போம்.

**LAW -12 - FOULS AND MISCONDULT:-** தனது சொந்த அணியை சேர்ந்த ஒரு வீரர் (Throw-in) எறியும் போது அதே அணி Goal Keeper அப் பந்தை கைகளால் பிடிக்க முடியாது. அப்படிப் பிடித்தால் எதிர் அணிக்கு Indirect Free kick வழங்கப்படும்.ஆனால் கோல் காப்பாளர் தனது அணி வீரர் எறிந்த (Throw-In) பந்தை கைகளால் பிடிக்காமல் கால்களால் (Kicks) விளையாடலாம். (No Offences)

**LAW - 14 - PENALTY - KICK:-** Penalty Kick வழங்கப்படும் பொழுது Goal Keeper , Goal Postக்கு இடைப்பட்ட Goal Line இல் முன்பு ஆடாமல் (Without Moving His Feet) நிற்க வேண்டும். சென்ற வருடத்தில் இருந்து இவ் விதி மாற்றப்பட்டு Goal Keeper அந்த Goal Lane இல் எப்படியும் அசையலாம். ஆனால் முன்பு றமாகவோ, பின்புறமாகவோ அசையமுடியாது.

**LAW -16 - GOAL KICK:-** முன்பு Goal Kick இல் இருந்த நேரடியாக Goal Score பண்ண முடியாது. இவ் வருடத்தில் இருந்து நேரடியாக Goal Score பண்ண முடியும்.

**LAW - 8 - THE START AND RESTART OF PLAY:-** நடுவரினால் பூவா, தலையா போட்டு ஆரம்பிக்கப்படும் ஆட்டத்தில் முன்பு பூவா, தலையா (Toss) வென்றவர் விரும்பினால் பந்தை எடுக்கலாம். (Kick-Off) அல்லது Side (ஆடும் பகுதியை) தெரிவு செய்யலாம். ஆனால் இவ்வருடத்தில் இருந்து Toss இல் வென்றவர் ஆடும் பகுதியை (Side) மட்டுமே தெரிவு செய்யலாம். தோற்றவர் கட்டாயமாக Kick-Off ஐ ஆரம்பிக்க வேண்டும்.
முன்பு Kick-Off இல் இருந்து நேரடியாக ஒருவரிலும் படாமல் கோல் போட முடியாது. ஆனால் தற்போது நேரடியாக கோல் போடலாம். ( நேரடியாக-Directly Score)

**GOAL KEEPER:-**கோல் Keeper பந்தை தனது கையால் பிடித்தவுடன் 5-6 Second க்குள் அடிக்க வேண்டும் அல்லது விளையாட எறியவேண்டும். அல்லாவிடில் Indirect Kick எதிர் அணிக்கு வழங்கப்படும். சென்ற வருடம் கோல் Keeper பந்தை கைகளால் பிடித்தவுடன் 4 அடிகளுக்கு மேல் வைக்க முடியாது. இவ் விதியுடன் இவ்வருடம் 5-6 Secound ஐ சேர்த்துள்ளார்கள். அதாவது Goal Keeper பந்தை கைகளால் பிடித்தவுடன் 4 அடிகளுக்கு (Steps) மேல் வைக்க முடியாது அல்லது 5-6 Secoundக்கு மேல் வைத்திருக்க முடியாது.

**CAUTION ( YELLOW CARD & DISMISSAL (RED CARD):-**
சென்ற வருடம் ஒரு ஆட்டத்தில் நடுவர் நான்கு காரணங்களுக்கு மட்டுமே YELLOW CARD or நான்கு காரணங்களுக்கு மட்டுமே (Red Card) காட்டலாம். இவ் வருடத்தில் இருந்த 7 காரணங்களுக்கு Yellow & Red Cards காட்டப்படலாம். அதாவது ஒவ்வொரு பிரிவுக்கும் 3 புதிய குற்றங்களை சேர்த்துள்ளார்கள்.

**YELLOW CARD 7 குற்றங்கள்.:-**

1. தொடர்ந்து Penal Offences யை கையாளுதல் (Persistenly in Fri the Law)
2. நடுவருக்கு எதிரான வார்த்தைப் பிரியோகம் (Dissent)
3. முறை தவறி எதிர் வீரர் (Body Contact) மீது பிரயோகம் (Unsporting Behaviour)
4. Free Kicks இல் L10 Yards வேண்டுகோளுக்கு இணங்காமை (Fails To Respect The Required Distance)
6. நடுவரின் அனுமதி இல்லாமல் Fieldஐ விட்டு வெளியேறுதல்
7. நடுவரின் அனுமதி இல்லாமல் Fieldக்குள் உள்வருதல்.



**RED CARD 7 குற்றங்கள்:-**

வேண்டுமென்று ஆபத்தான அணுகுமுறை (Serious Foul Play)(Ball in playing distance)
வேண்டுமென்று முறைகேடான மோதல் (Violent Conduct) (Ball not in playing distance)
3. துப்புதல் (Spits)
4. கோல் போகும் போது பந்தை கையால் பிடித்தல் (கோல் Keeperஐ தவிர)
5. கோல் போகும் போது பந்தை கொண்டு ஓடும் வீரரை Foul போடல் (Denies an Obvious Goal - Scoring Opportunity)
6 அதே ஆட்டத்தில் இரண்டாவது தடவையாக Yellow Card காட்டப்படல் (Second caution in same match)
7. Field இல் முறைகேடான வார்த்தைகள் (Bad Words ) பாவித்தல்

FRANCE 98
WORLD CUP

மேற்கூறிய புதிய விதிகள் தற்போது நடைபெறும் உலகப் பந்தாட்டப் போட்டிகளை கண்டுகளிக்கும் உதைபந்தாட்ட பிரியர்களிற்கு இலகுவான விளக்கத்தை கொடுப்பதற்காகவே வழங்கப்படுகின்றது.



**"யோகாஸ்" சார்பாக இலவசமாக "கிராமத்து விருந்தில்" சாப்பிட வேண்டுமா?**

*1998ம் ஆண்டில் நடைபெற இருக்கும் உலகக் கோப்பைக்கான உதைபந்தாட்டத்தில்*

*1. எந்த இரு நாடுகள் இறுதி ஆட்டத்தில் பங்கு கொள்ளும் என்பதனையும்*
*2. எந்த நாடு வெற்றிக் கிண்ணத்தை தட்டிக் கொள்ளும் என்பதனையும் சரியாக எழுதி ஜூலை 03, 98ந் திகதிக்கு முன்பாக விளம்பரத்தின் விலாசத்திற்கு அனுப்பி வையுங்கள்.*
*வெற்றிபெறுபவர், "யோகாஸ்" ஆதரவால் வழங்கப்படும் $15 பெறுமதியான வவுச்சர் "கிராமத்து விருந்து" உணவகத்தில் பாவிக்கலாம்.*



**Gamini Wanigasekera**
Barrister Solicitor
& NOTARY PUBLIC (ONTARIO)
BARRISTER-AT-LAW (ENGLAND)
ATTORNEY-AT-LAW (SRI LANKA)




காணி, நிலம் - வாங்க, விற்க, அடமானம்
வியாபாரம் - வாங்க, இணைத்தல் குற்றச் சட்டம் - மது சம்பந்தமான குற்றம் குடும்பச் சட்டம் - பிரிவு, விவாகரத்து சொத்து - கடைசி உயில்
**இவை சம்பந்தமான சேவைகள் சிறந்தமுறையில் வழங்கப்படும்**


***REAL ESTATE** - Buying, Selling &Mortgaging of Homes*
***BUSINESS** - Purchase of Businesses & Incorporation, Power of Attorney & Affidavits*
***CRIMINAL LAW** - Impaired Driving & Criminal Code Offences*
***FAMILY LAW** - Divorce, Separation, Agreements & Custody*
***LAST WILLS** - Probate in Canada & SriLanka*
***IMMIGRATION** - Refugee Applications*

**Tel: (416) 449-4294 Fax: (416) 449-4369**
*All Languages Spoken*
75 Donway West , Suite 600, Donmills, Ontario, M3C 2E9



**LOW COST CARPET**
**& Interior's Warehouse**
உரிமையாளர்: சபேசன் காங்கேசு
☎: (416) 605-1990
390 Progress Ave.,Unit 4, Scarborough, Ont.





* தரமான நிலப்படுக்கைகள் (Carpet, Hardwood Floor, Parquet Floor)
* சாளரங்களின் மறைவுச் சேலைகள் (Window Coverings, Blinds, Valance, Vertical blinds)
* வீட்டுத் தேவைகளிற்கான சாதனங்கள் (Fridge, Stove, Washer & Dryer, Dish washer)
*மற்றும் சகலவிதமான தளபாடங்களும் (Furnitures) நீண்டகாலமாக மக்களின் தேவைக்கேற்ப விற்பனை செய்வதில் முன்னணியில் நிற்கும் நிறுவனம் **LOW COST**

-வீணை மைந்தன்

# நான் வாழப் போகிறேன் (சுவடு 12)



இலங்கை -இந்தியத் தயாரிப்பாளர்களின் கூட்டுத் தயாரிப்பான 'பைலட் பிரேம்நாத்' திரைப்படக் காட்சிகள் கொழும்பில் படமாக்கப்பட்ட போது இலங்கைக்கு சிவாஜி அவர்கள் வருகை தந்திருந்தார். அச் சமயம் நடிகர் திலகத்தின் மிகநெருங்கிய நண்பர்களுள் ஒருவரும் வானொலிக் கலைஞருமாகிய திரு. பி. எச். அப்துல் ஹமீட் இலங்கை வானொலிக்காக சிவாஜி அவர்களுடன் ஒரு நேர் காணலைத் தயாரித்திருந்தார்.

சிவாஜி அவர்களிடம் பல கேள்விகளைக் கேட்டுவிட்டு (என்னிடம் இப்போதும் அந்த ஒலி நாடாத் தொகுப்பு உள்ளது.) இறுதியாக ஒரு கேள்வியைக் கேட்டார். "திரு. சிவாஜி கணேசன் அவர்களே! இது ஒரு சம்பிரதாய பூர்வமான கேள்வி. வழக்கமாக எல்லோரும் கேட்பது தான். ஆனால் இரசிகர்களுக்காகச் சற்று வித்தியாகமாக உங்கள் பதிலை எதிர்பார்க்கிறேன்...!
உங்களால் மறக்க முடியாத விடயம் எது.

சிவாஜி அவர்களின் பதில் இப்படியாகத்தான் இருந்தது. "என்னால் மறக்க முடியாத விடயம், என்னால் மறக்க முடியாத ஒரேயொரு விடயம்...!.
உங்களுக்குத் தெரியும் நான் Belongs To பெரியார். பெரியார், ஈ. வே. ராமசாமி நாயக்கரின் பள்ளியில் பயின்ற மாணவன். அதன் பின் அண்ணாவுடன் அரசியலில் கலந்து பணி புரிந்தேன். பின் அண்ணாவை விட்டு பிரிந்து பெருந்தலைவர் காமராஜருடன் இணைந்து தேசியப் பணியில் ஈடுபட்டவன். இந் நேரத்தில் என்னுடைய 125வது பட விழாவிற்கு (உயர்ந்த மனிதன்) அருமை அறிஞர் அண்ணா அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். அன்று அவர் பேசியது தான் அவருடைய கடைசிப் பேச்சு. அதன்பின் அவர் ஒரு நிகழ்சியில் கலந்து கொண்டார். ஆனால் அவர் பேசியது கடைசியாக என்னுடைய பட விழாவில்.

அன்று அவர் பேசியது இன்று நினைவுக்கு வருகிறது. நீ எங்கிருந்தாலும் வாழ்க! மாற்றன் வீடுத் தோட்டத்து முல்லையும் மணக்கும், அப்படியென்று அரசியலைக் குறிப்பிட்டார். பிறகு அவருடைய நண்பர்களுக்குச் சொன்னார் அவர்கள் முன்னிலையிலேயே! சிலபேருடைய உதவியால் தான் சிவாஜி அவர்கள் சினிமாவிற்குள் வந்தாரென்று எல்லோரும் கூறுகிறார்கள். பலபேருடைய உதவியில்லாவிட்டாலும் சிலநாள் கழித்து வந்திருப்பார். அவருடைய முன்னேற்றத்தை யாரும் தடுக்க முடியாது என்று அவர்களைச் சார்ந்தவர்களுக்குப் புரியும் படியாக மிக அழகாகச் சொன்னார்கள். அன்று அவர் கூறிய இந்தப் பாராட்டுத்தான் என்றும் என் வாழ்வில் மறக்க முடியாதது...." மனம் திறந்து பாராட்டுவதில் அண்ணாவிற்கு நிகர் அண்ணாதான்!. அப்படிப் பட்ட அண்ணாவைத் தோழமையாகக் கிடைத்தது சிவாஜி செய்த பெரும் பேறு!. சிவாஜி கணேசனது வளர்ச்சியில் மிகுந்த கவனமும் அக்கறையும் கொண்டவர் அண்ணா அவர்கள்!

"கொட்டிய முரசும் கூவிய படையும் எட்டிய பரியும் எழுந்து நடந்து- கோட்டை மதிலைச் சுற்றி வளைத்து வேட்டையாடி வெற்றி படைத்து... வாழ்க! சிவாஜி வாழ்கவென்று வாழ்த்துரை கூறி வழங்கிய போது ... ஓஹோ... என்று எதிரொலித்ததே இந்தக் கோட்டைதான்...." என்று அண்ணா அவர்கள் தீட்டிய வீர வசனங்களைப் பேசி சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம் நாடகத்தின் மூலம் கணேசனை சிவாஜி கணேசன் ஆக ஆக்கியது ஆண்ணாவின் உயிர்த் துடிப்பான வசனங்களேயென்று முன்பு குறிப்பிட்டிருந்தேன்.
இந் நாடகத்திற்குப் பிறகு சிவாஜிக்கும் அண்ணாவுக்கும் நெருக்கம் அதிகமாயிற்று. அண்ணாவின் பேச்சாற்றலும், எழுத்தாற்றலும், பண்பும் சிவாஜியைப் பெரிதும் கவர்ந்தது.

அண்ணா அவர்களிடம் சிவாஜி குருகுலவாசம் செய்ய ஆரம்பித்தார். அண்ணாவுடன் கூட்டங்களுக்குச் செல்வது, மேடையில் தானும் பேசுவது என்று அண்ணாவின் மாணவரானார். "அறிஞர் அண்ணா அவர்கள் கட்டளையிட்டால்... கலைஞர் கருணாநிதி அவர்கள் கட்டளையிட்டால் எனக்குள்ள சினிமாப்படங்களையெல்லாம் கிழித்துப் போட்டு விட்டுக் கழகம் நடத்த இருக்கின்ற போராட்டத்தில் குதிக்க நானும் தயார்..." என்று முழங்கிய சிவாஜியினது உணர்வை என்றும் மதிப்பவர் அண்ணா அவர்கள்.
அதேபோன்றுதான் கலைஞர் அவர்களும் சிவாஜியிடத்து மிகுந்த பாசமும் மதிப்பும் கொண்டவர். பிற்காலத்தில் சிவாஜி அவர்கள் கழகத்தை விட்டுப் பிரிந்தாலும் சமயம் வாய்க்கும் போதெல்லாம் அண்ணா அவர்கள் சிவாஜியின் திறமையைப் பாராட்டத் தவறுவதில்லை.

அரசியல் கட்சியானாலும் சரி வேறெந்த பொது அமைப்புகளானாலும் சரி உட்பூசல், பொறாமையுணர்வு இல்லாத மனிதர்கள் அங்கம் வகிப்பது என்பது இந்நாளில் கூட இல்லாத ஒன்றாகும். தமிழனுடைய வீழ்ச்சிக்கு இதுவும் ஒரு காரணமாகும். யார்யார் எப்படிப்பட்ட குணாதிசயம் கொண்டவர்கள் என்பதை தெளிவாகத் தெரிந்த படியால் தான் அண்ணாவால் தி.மு.க. வை வளர்த்தெடுக்க முடிந்தது.

